*ஆய்வுக்கட்டுரை இல: 37*

# டாக்டர் அப்துல் கலாமின் தலைமைத்துவம் - ஓர் பன்முகப் பார்வை

**Srirangan Pirasath[1], and Sivakumar Nirosan[2]**

*[1]Vavuniya Study Centre, Open University of Srilanka*
*[2]Department of Philosophy, University of Jaffna*
*sripirasath_87@yahoo.com[1], ssnirosan@yahoo.com[2]*

***ஆய்வுச்சுருக்கம்***

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரும், விஞ்ஞானியுமாகிய டாக்டர் அப்துல் கலாம் உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்களினால் விரும்பப்படுகின்ற ஒரு ஆளுமை மிக்க மனிதராக விளங்கியவர். இன்றைய இளைஞர் சமூகத்தின் கனவு நாயகனாக விளங்குபவர். இத்தகைய சிறப்புக்கு அவரது பன்முக ஆளுமையே காரணமாகும். அவருடைய அந்த பன்முக ஆளுமையின் சிறப்பினை மீள்பார்வை செய்து சமகால சமூகத்தின் மத்தியில் அதனை மீள் வலியுறுத்துவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். 20ம் நூற்றாண்டில் பல்வேறு அறிவாற்றல்கள், புலமைத்துவங்களின் போக்குகள் தலைமைத்துவம் பற்றிய எண்ணக்கருவில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. 18ம், 19ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட ஜனநாயகப் புரட்சிகள் ஆட்சித் திறன், அதிகாரம் தொடர்பான எண்ணக்கருவை ஆள்நிலைப்படுத்தலில் நின்று நீக்கம் செய்கிறது. அதாவது ஆட்சியில் இருப்போரின் தன்னிச்சையான அதிகார துஷ்பிரயோகங்களை மட்டுப்படுத்தி ஜனநாயக வழிமுறையிலான தலைமைத்துவ பண்புகளை விருத்தி செய்ய வழிவகுத்துள்ளது.“பகுத்தறிவு ஆக்கங்கள் (Creation of Rationality) தீர்மானங்கள், உணர்வுகள் ஆகியவற்றை நம்பிக்கையினதும், நடவடிக்கையினதும் அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்படும் ஒரு தனிநபரே தலைவராவார்” என ஈ.சீ.லிண்டர்மன் (நு.ஊ.டுiனெநசஅயுெ) என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். இந்த வகையில் முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் இளைஞர்களின் கனவு நாயகனாக; அரசியல் வாதியாக; விஞ்ஞானியாக; சிறந்த நிர்வாகியாக; சிறந்த ஆசிரியராக தனது பன்முக ஆளுமையின் மூலம் இந்தியாவை வல்லரசாக்குவதில் முனைப்புக் காட்டியுள்ளார். இந்தியாவின் பல்வேறு முன்னேற்றகரமான மாற்றங்களுக்கு அவரது சிந்தனைகள் அடித்தளமிட்டிருந்தன. அவர் தன்னுடைய வார்த்தைகளாலும், தன்னுடைய வாழ்க்கையாலும் இளைஞர்களுக்கு ஒரு சிந்தனைத் தளத்தையும், உத்வேகத்தையும் கொடுத்தவர். இந்தவகையில் நோக்குகின்ற போது அவருடைய பன்முகத் தன்மை கொண்ட ஆளுமைத் திறன் எந்தவொரு மனிதனதும், சமூகத்தினதும், நாட்டினதும் உயர்ச்சிக்கு ஒரு முன்மாதிரியாக, படிக்கல்லாக அமையும் என்பதனை இவ்வாய்வுக் கட்டுரை வலியுறுத்துகின்றது.இவ் ஆய்வுக்குத் தேவையான தரவுகள் டாக்டர் அப்துல் கலாமின் நூல்கள்,ஏனைய இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்கள், ஆய்விதழ்கள், இணையத்தளக் கட்டுரைகள் என்பவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன. இவ்வாய்வானது ஒப்பீட்டு அணுகுமுறை, பகுப்பாய்வுமுறை, வரலாற்றுமுறை, உளவியல் அணுகுமுறை என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

**பிரதான சொற்கள்:** *தலைமைத்துவம், அப்துல்கலாம், குடியரசுத் தலைவர், இளைஞர்கள்*

**அறிமுகம்**

இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர், இளைஞர்களின் நாயகன், இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர், சிறந்த அரசியல்வாதி, சிறந்த பொருளாதார அறிஞர் என்றவாறாக பல பரிமாணங்களைக் கொண்ட அப்துல் கலாமின் பன்முக ஆளுமையினையும், மனித நேயத்தினையும் அறிந்து கொள்வது ஒவ்வொரு தனிமனிதனதும், ஒவ்வொரு சமூகத்தினதும், ஒவ்வொரு நாட்டினது முன்னேற்றகரமான வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

இந்தியா பிரித்தானிய காலனித்துவத்தில் இருந்த காலப்பகுதியில் 1931ம் ஆண்டு ஒக்டோபர் 15ம் திகதி ஜைனுலாப்தீனுக்கும், ஆஷியம்மாவிற்கும் தவப்புதல்வராக இராமேஸ்வரத்தில் பிறந்தார். இவருடைய குடும்பம் ஏழ்மையாக இருந்த பொழுதிலும் கல்வி கற்க ஆர்வம் கொண்டிருந்தமையினால் காலைவேளைகளில் செய்தித்தாள்களை விநியோகம் செய்து தனது கல்லூரிப் படிப்பினைத் தொடர்ந்தார்.

கல்வித்துறையில் அவர் கொண்டிருந்த ஆர்வம் காரணமாக இளமானிப் பட்டத்தினையும் தொடர்ந்து முதுமானிப் பட்டத்தினையும் பெற்று விஞ்ஞானியாக இணைந்து கொண்டு ஆராய்ச்சிகளை தொடர்ந்ததன் விளைவாக ஏவுகணை சோதனையினை வெற்றிகரமாக நிகழ்த்தி இந்தியாவின் இராணுவ பலத்தினை உலகறியச் செய்தார். அத்தோடு இந்தியக் குடியரசின் 11வது ஜனாதிபதியாக பதவியேற்று மக்களுக்கு சேவையாற்றினார். அவர் “மக்களின் ஜனாதிபதி” என்று அழைக்கப்படும் அளவுக்கு அவரது நிர்வாகத் திறமை சிறப்புற்று விளங்கியது.
இந்த வகையில் அப்துல்கலாம் மறைந்தாலும் அவருடைய எண்ணங்களும் சிந்தனைகளும் என்றும் அழியாது; மக்களது மனங்களில் வாழ்கின்றன (வாழ்கின்றார்). எனவே அவரது சிந்தனைகளை மீள்பார்வை செய்து அவரது சிறந்த தலைமைத்துவப் பண்புகளையும், வாழ்வியல் சிந்தனைகளையும் வலியுறுத்துவது அவசியமானதாகும்.

**ஆய்வின் கருதுகோள்**

டாக்டர் அப்துல் கலாமின் பன்முக ஆளுமை தனிநபர் ஆளுமை முதல் நாட்டின் அபிவிருத்தி வரை சாதகமான விளைவினை ஏற்படுத்தக்கூடியன, டாக்டர் அப்துல் கலாம் சிறந்த தலைமைத்துவத்துக்கு ஓர் மாதிரியாக வாழ்ந்து காட்டியவர் என்பது இவ் ஆய்வின் கருதுகோள்களாகும்.

**ஆய்வின் நோக்கம்**

21ம் நூற்றாண்டின் சிறந்த நிர்வாகிகளின் தலைமைத்துவத்தினை ஆய்வு செய்வதும், அப்துல் கலாமின் வாழ்க்கை முறை, அவரது ஆளுமை, நிர்வாகத்திறன் போன்றவற்றை ஆய்வு செய்வதும் இவ் ஆய்வின் நோக்கங்களாகும்.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வானது விபரண ஆய்வாகும். இவ் ஆய்வானது ஒப்பீட்டு அணுகுமுறை, பகுப்பாய்வுமுறை, வரலாற்றுமுறை, உளவியல் அணுகுமுறை என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இவ் ஆய்வுக்குத் தேவையான தரவுகள் டாக்டர் அப்துல் கலாமின் நூல்கள், ஏனைய இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்கள், ஆய்விதழ்கள், இணையத்தளக் கட்டுரைகள் என்பவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

**ஆய்வுரை**

ஒருவர் கொண்டிருக்கக்கூடிய அறிவாற்றல் சார்ந்த காரணிகள் அவர் சிறந்த தலைவராக எழுச்சி பெறுவதற்கு கணிசமான பங்களிப்பினை வழங்குகின்றது. ஒக்டவே ரீட் (Ocdaway Tead) என்பவர் தலைமைத்துவத்தின் அடிப்படைப் பண்புகளாக

I. புலப்பதிவு
II. உற்சாகம்
III. மனிதநேயத் தன்மை
IV. பாசப் பிணைப்பு
V. நேர்மைத் தன்மை
VI. தொழில்நுட்ப ரீதியான ஆற்றல்
VII. தீர்மானமெடுக்கும் ஆற்றல்
VIII. புத்திக்கூர்மை
IX. விசுவாசம்
X. தூரநோக்கு
XI. ஆசாரம்
XII. கண்ணியம்
XIII. சுறுசுறுப்பு

போன்றவற்றைக் குறிப்பிடுகின்றார். இப்பண்புகள் மூலம் ஒருவரை நாம் சிறந்த தலைமைத்துவ நிர்வாகி என நிறுவ முடிகின்றது.

**a. அறிவாற்றல்**

அப்துல்கலாம் செயின்ட் ஜோசப் கல்லூரியில் இயற்பியல் கற்று 1954ம் ஆண்டு அத்துறையில் இளங்கலைமானிப் பட்டம் பெற்றார். பின்னர் விண்வெளிப் பொறியியலில் நாட்டம் கொண்டதனால் 1955ம் ஆண்டு விண்வெளிப் பொறியியல் படிப்பை தொடர்ந்து முதுகலைமானிப் பட்டம் பெற்றார். பின்னர் (DRDC) பிரிவில் விஞ்ஞானியாக இணைந்து கொண்டு சிறிய ஹெலிஹப்ரரை வடிவமைத்தார். அத்தோடு நின்றுவிடாது இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தில் (ISRO) இணைந்து 1980ம் ஆண்டு SLV-III என்ற ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினி என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவினார். 1999ம் ஆண்டு 'பொக்ரான்' அணு சோதனையில் முக்கிய பங்காற்றி இந்தியாவை அணு வல்லரசாக மாற்றினார்.
மேலும் அக்கினிச் சிறகுகள், இந்தியா 2020, எழுச்சி தீபங்கள், பறந்தது ஒரு புதிய குழந்தை போன்ற நூல்களை எழுதி வெளியிட்டதோடு பல்வேறு விருதுகளையும் பெற்றிருந்தார். பத்மபூஷன், பத்ம விபூஷன், பாரத ரத்னா போன்ற உயர் விருதுகளைப் பெற்றிருந்தார். இவை அவரது அறிவாற்றலையும் புத்திக் கூர்மையினையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

**b. தூரநோக்கு**

அப்துல் கலாம் இந்திய தேசத்தை தன் உயிரிலும் மேலாக நேசித்தார். 2020ல் இந்தியா வல்லரசாக மாறும் என்ற தூரநோக்கின் அடிப்படையில் செயற்பட்டதோடு ‘இளைஞர்களே கனவு காணுங்கள்’ எனக்கூறி இளைஞர்கள் மத்தியில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தினார். இளைஞர்கள் தவறான பாதைகளில் சென்று அழிவதனைத் தடுத்து நிறுத்தி ‘நீ முயன்றால் நட்சத்திரங்களை பறிக்கலாம்’ என்று கூறி இளைஞர்களை நெறிப்படுத்தினார். இளைஞர்களே நாட்டின் எதிர்காலம் என்பதனை எடுத்துக் காட்டினார். மேலும் ஏவுகணைக் கண்டுபிடிப்பு, அணுப்பரிசோதனை, பொருளாதார மாற்றம், தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தியாவினை வல்லரசாக மாற்றுவதனையே தனது இலட்சியமாக கொண்டிருந்தார்.

**c. தீர்க்கமான முடிவெடுக்கும் ஆற்றல்**

வல்லரசுகளின் போட்டிக்கு மத்தியில் அப்துல்கலாமின் தீர்மானமெடுக்கும் ஆற்றல் அவரின் நிதர்சனத்தை எடுத்துக் காட்டுகின்றது. இதற்கு சான்றாக பின்வரும் சந்தர்ப்பங்களை குறிப்பிடலாம்.

1. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பாதுகாப்பு இல்லை என மக்கள் போராடிய பொழுது விஞ்ஞானி என்ற வகையில் ஆய்வு செய்து கூடங்குளம் அணுமின் நிலையம் பாதுகாப்பானது எனக்கூறி ரஷ்யா மற்றும் அமெரிக்காவின் சதி வேலைகளை உடைத்தெறிந்தார்.
2. இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்க்கமான முடிவினை முன்வைத்தார் (அது அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை)
3. இலங்கையின் இனங்களுக்கிடையே நல்லுறவினை ஏற்படுத்தும் வகையில் மும்மொழிக் கொள்கையினை ஆரம்பித்து வைத்தார்

**d. ஜனநாயகத் தலைவரின் பண்பு**

அப்துல்கலாம் இந்திய குடியரசுத் தலைவராக இருந்த சமயத்தில் அவருக்கு ஏராளமான பரிசுப் பொருட்கள் வரும். வெளிநாடுகளில் இருந்தும் ஏகப்பட்ட பரிசுப் பொருட்கள் வந்த வண்ணம் இருக்கும். அவற்றையெல்லாம் அப்துல் கலாம் போட்டோ எடுத்து வைத்து வகைப்படுத்துவார். பின்னர் அப்படியே அதனை ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பிவிடுவார். ஒரு பொருளைக் கூட திரும்பிப் பார்த்ததில்லை. ஒரு பென்சிலைக்கூட தனக்கென்று எடுத்துக் கொண்டதில்லை. வெளிநாட்டு சுற்றுப் பயணிகளின் அன்பளிப்புக்களை மறுத்தால் அந்த

நாடுகளை அவமானப்படுத்துவது போல் அமைந்துவிடும் என்பதனால்தான் அவர் பரிசுப் பொருட்களை பெறுவதனை வழக்கமாக கொண்டிருந்தார்.

அப்துல் கலாம் சுயசிந்தனையற்ற (ஆமாம் போடுபவர்கள்) அதிகாரிகளை பக்கத்தில் வைத்துக் கொள்வதில்லை. ஒருமுறை உச்ச நீதிமன்ற நீதிபதி ஜனாதிபதியை சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அருகில் நின்ற அவரது செயலாளரைப் பார்த்து மிஸ்டர்.நாயர் நான் சொல்வது சரியா? என்று வினாவினார். அதற்கு அந்த செயலாளர் அது சரியாக இருக்காது என்று அதற்கான காரணங்களை அடுக்கிக் கூறினார். உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு அது வியப்பாக இருந்தது. ஜனாதிபதியின் கருத்துக்கு சாதாரண அதிகாரி எதிர்க்கருத்து சொல்வதனையும், அவர் அதனை அனுமதிப்பதனையும் கண்டு வியந்தார்.

குடியரசுத் தலைவராக அப்துல் கலாம் பொறுப்பேற்ற பொழுது இராமேஸ்வரத்திலிருந்து அவரது உறவினர்கள் 50 பேர் டெல்லிக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் அனைவரும் குடியரசுத் தலைவரின் மாளிகையில் தங்கியிருந்தனர். அவர்கள் டெல்லியை சுற்றிப் பார்க்க ஒரு பஸ் ஒழுங்கு செய்யப்பட்டது. அந்த பேரூந்துக் கட்டணத்தை அப்துல் கலாம் செலுத்தினார். அவர்களில் யாருக்கும் எந்த சமயத்திலும் அரசுக்கு சொந்தமான கார் பயன்படுத்தப்படவில்லை. அவர்கள் டெல்லியில் தங்கியிருந்த சமயத்தில் அவர்களுக்கு உணவுச் செலவாக இரண்டு லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. அந்த தொகையை கலாம் தன்னுடைய கையில் இருந்து செலுத்திவிட்டார். எந்த குடியரசுத் தலைவரும் இது போன்று செலுத்தியதே இல்லை.

### e. மனிதநேயத் தன்மை

கலாம் தன்னுடன் பணிபுரிபவர்கள் மீது அதிக அக்கறை எடுத்துக் கொள்வார். ஒருமுறை கலாமுடன் பணிபுரிந்த ஒருவர் தனது குழந்தைகளை ஓர் திருவிழாவிற்கு அழைத்துச் செல்வதாக வாக்களித்திருந்தார். ஆனால் வேலை காரணமாக அவர் செல்ல மறந்துவிட்டார். கடைசித் தருணத்தில் நினைவு வந்து வீட்டுக்குச் சென்றபோது தான் தெரிந்தது முன்னரே சென்ற கலாம் அவரது குழந்தைகளை திருவிழாவிற்கு கூட்டி சென்றுவிட்டார் என்று.

கலாம் ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு பார்க்காமல் அனைவரிடமும் அன்பாகப் பழகும் பண்பாளர். அவருக்குத் செருப்புத் தைக்கும் தொழிலாளியும் தோழராக இருந்திருக்கின்றார். திருவனந்தபுரம் அருகே காந்தாரியம்மன் கோவில் பகுதியில் செருப்புத் தைப்பவர் ஜோர்ஜ். அவருடன் அப்துல் கலாம் நேசமுடன் பழகிவந்தார். ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பிறகு ஒருமுறை திருவனந்தபுரத்துக்கு அப்துல் கலாம் வந்தார். அப்போது அவருக்கு ஜோர்ஜ் ஞாபகம் வந்தது. அவருடைய அங்க அடையாளங்களைக் கூறி அவர் எங்கே இருந்தாலும் அழைத்து வருமாறு பணித்தார். உடனே பொலீஸார் அழுக்கு உடையுடன் இருந்த ஜோர்ஜை தேடிக் கண்டுபிடித்து ஆளுநர் மாளிகைக்கு அழைத்து வந்தனர். நீண்ட நாட்களுக்குப் பின்பும் தன்னை

ஞாபகம் வைத்து அழைத்து வரும்படி கூறிய அப்துல் கலாமைக் கண்டு அவர் உள்ளம் நெகிழ்ந்தார். அவரிடம் கலாம் கேட்ட முதல் கேள்வி ‘‘சாப்பிட்டீங்களா?’’ என்பதுதான்.

**f. நேர்மைத் தன்மை**

ஒருமுறை நிகழ்வு ஒன்றில் பங்குபற்றிய அப்துல் கலாமிற்கு அதன் ஒருங்கிணைப்பாளர்களான பிரபல வெட் கிரைண்டர் நிறுவனத்தினர் விழா மேடையில் அவருக்கு ஒரு கிரைண்டரை நினைவுப் பரிசாக அளித்து கௌரவித்தனர். மேடை மரியாதை கருதி, அந்தப் பரிசை ஏற்றுக் கொள்ள விரும்பாத அப்துல் கலாமின் இல்லத்துக்கு புதிதாக ஒரு கிரைண்டரும் தேவைப்பட்டது. எனவே, அன்பளிப்பாக அதை ஏற்றுக்கொள்ள இயலாது என மறுத்துவிட்ட அவர் அந்த கிரைண்டரின் சந்தை விலை மதிப்பின்படி நான்காயிரத்து ஐந்நூற்றைம்பது ரூபாய்க்கான காசோலையை அந்த நிறுவனத்தின் பெயருக்கு தனது கையொப்பமிட்டு எழுதித் தந்தார்.

அந்த காசோலைக்குரிய தொகை அவரது வங்கிக் கணக்கிலிருந்து நீண்ட நாட்களாக எடுக்கப்படாமல் இருப்பதனை அப்துல் கலாமின் உதவியாளர்கள் அவரது கவனத்துக்கு கொண்டு வந்தனர். நினைவுப் பரிசாக பெற்ற பொருளின் விலையை தாமாக முன்வந்து காசோலையாக அளித்த அவரது கண்ணியத்தைவிட, அவரது நேர்மையான அடுத்தகட்ட நடவடிக்கை அந்த கிரைண்டர் நிறுவனத்தை திக்குமுக்காட வைத்துவிட்டது. அப்துல்கலாம் அந்த காசோலையை வங்கியில் வைப்புச் செய்யாவிட்டால் நீங்கள் தந்த கிரைண்டர் உடனடியாக உங்களுக்கு உடனடியாக திருப்பி அனுப்பப்படும் என அன்பு மிரட்டல் விடுத்தார். இது அவருடைய நேர்மைத் தன்மைக்கு எடுத்துக்காட்டாகும்.

**g. தன்னடக்கம்**

அப்துல் கலாம் தன்னடக்கத்தின் உச்சமாக திகழ்ந்தவர். அவரைப் போன்று பணிவான மனிதர்களைக் காண்பது அரிது என்று உலகத் தலைவர்களே வியந்துள்ளனர். நான் என்ற அகந்தை எண்ணம் துளியளவு கூட அவரிடம் இருந்ததில்லை. சிறுவயது முதல் வாழ்நாளின் இறுதிவரை அமைதியானவர், அன்பானவர் என்ற பாதையில் இருந்து அவர் விலகாமலே இருந்தார். ‘‘நான் யார் தெரியுமா?’’ என்ற ரீதியில் அவர் ஒரு நாள் கூட செயற்பட்டதில்லை. ஒரு தடைவை அவர் வெளிநாடு சென்றிருந்த போது விமான நிலைய அதிகாரிகள் அவர் அணிந்திருந்த பாதணியை அகற்றி சோதித்த போது சிரித்துக் கொண்டே முழு ஒத்துழைப்புக் கொடுத்தார்.

எந்தவொரு இடத்திலும் தன்னை முன்னிலைப்படுத்தி பரபரப்பு ஏற்படுத்துவதை அவர் ஒருபோதும் விரும்பமாட்டார். ஜனாதிபதியாக இருந்த போது ஒருநாள் டெல்லி ஜம்மா மசூதிக்கு தொழ சென்ற அவர் இட நெருக்கடி காரணமாக கடைசி வரிசையில் கூட்டத்தோடு கூட்டமாக நின்று இறைவனைத் தொழுதது குறிப்பிடத்தக்கது.

**h. விசுவாசம**

உலகத் தலைவர்களில் அப்துல் கலாம் அளவுக்கு இளைய சமுதாயம் எழுப்பிய கேள்விகளுக்கு இதுவரை யாருமே உன்னதமான பதில்களை அளித்ததில்லை. அப்துல் கலாமிடம் ஒரு மாணவி நல்ல நாள் எது? கெட்ட நாள் எது? என்ற கேட்டாள். அதற்கு அப்துல் கலாம் ‘‘பூமி மீது சூரியஒளி பட்டால் அது பகல். படாவிட்டால் அது இரவு. இதில் நல்லது கெட்டது என்று எதுவுமில்லை’’ என்றார்.

அப்துல் கலாம் மிகப்பெரிய உறவு, நட்பு வட்டாரத்தைக் கொண்டவர். ஆனால் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அவர் எவருக்கும், எதற்கும் சிபார்சு செய்ததே இல்லை. ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் கூட அந்த மாத சம்பளத்தை வாங்கி அதில் ஒரு பகுதியை தன் குடும்பத்துக்கு அனுப்புவதை அப்துல் கலாம் வழக்கத்தில் வைத்திருந்தார்.

**i. கண்ணியம்**

அப்துல் கலாம் எந்தவொரு காலகட்டத்திலும், எந்தவொரு பதவியையும் எதிர்பார்க்காதவர். ஜனாதிபதி வேட்பாளராக அவர் பெயர் அறிவிக்கப்படுவதற்கு சற்று முன்பு வரை அவர் தன் விரிவுரையாளர் பணியில் சுறுசுறுப்பாக இருந்தார். அப்துல் கலாம் இளம் வயதில் விமானி ஆகவேண்டும் என்று ஆசைப்பட்டார். அது கிடைக்காததால் பாதுகாப்புத் துறை தொழில்நுட்ப படிப்பை தெரிவு செய்தார்.

**j. இன ஒற்றுமையை**

இராமேஸ்வரத்தில் உள்ள லட்சுமணத் தீர்த்தத்தில் தை மாதம் விழா நடத்தும் போது அப்துல் கலாம் குடும்பத்தினருக்கு ‘‘சந்தனப்பாடி’’ என்று ஒரு மரியாதை கொடுத்தனர். அந்தளவுக்கு அப்துல் கலாம் குடும்பத்தினருக்கும் இந்துக்களுக்கும் நெருக்கம் இருந்தது. பணம், வயது, சாதி, இனம், மதம், மொழி என்பனவற்றில் கலாம் வேறுபாடு பார்த்ததே இல்லை. இந்த அரிய குணத்தை அவர் தன் தந்தையிடம் இருந்து பழக்கத்தில் பெற்றார் எனலாம்.

**k. தொழில்நுட்ப ரீதியான ஆற்றல்**

1998ம் ஆண்டு மே மாதம் 11ம் திகதி பெக்ரானில் இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தி உலக அரங்கில் தன்னை வல்லரசாக அறிவித்தது. இதற்கு அப்துல்காலமே அடித்தளம் இட்டார். இந்தியாவுக்காக அவர் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை உருவாக்கிய போது அமெரிக்கா உட்பட பல நாடுகள் இவரை ஆச்சரியத்துடனும், மிரட்சியுடனும் பார்த்தன.

போலியோ நோயாளிகளுக்கான எடை குறைந்த ஊன்றுகோள் மற்றும் இருதய நோயாளிகளுக்கான எடை குறைந்த ஸ்டெண்ட் கருவி ஆகியவையும் இவரது கண்டுபிடிப்புக்களே. அந்த ஸ்டெண்டுக்கு கலாம் ஸ்டெண்ட் என்றே பெயரிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### l. தமிழ்மொழி மீது கொண்ட பற்று

டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் தழிழ் மொழி மீது அதிக பற்றுக் கொண்டவர். எண்ணற்ற பல தமிழ் இலக்கியங்களை அப்துல் கலாம் படித்துள்ளார். குறிப்பாக திருக்குறளை அதிகம் விரும்பிக் கற்றார்.

இவ்வாறாக டாக்டர் அப்துல் கலாம் கொண்டிருந்த பண்புகள் அவருடைய சிறந்த தலைமைத்துவத்தினையும், அவருடைய பன்முக ஆளுமையினையும் வெளிப்படுத்துவனவாய் அமைந்தன.

### முடிவுரை

தனிமனிதனின் தலைமைத்துவத்திற்கு மேலே கூறப்பட்ட பண்புகள் அவசியமாகின்றன. மேலும் தலைமைத்துவத்தின் வெற்றியினை விடயப்பரப்பு, தலைவர், பின்பற்றுவோர், சூழ்நிலை போன்ற காரணிகள் தீர்மானிப்பதாக அமைகின்றன. இந்த வகையில் அப்துல் கலாமின் சிறந்த தலைமைத்துவப் பண்புகள் மேற்குறித்த பண்புகள் ஊடே வெற்றியைப் பிரதிபலிப்பதாய் அமைகின்றன. இந்தியர், இலங்கையர் என்றில்லாது அப்துல்கலாமின் சிந்தனைகளும், சிறந்த மனிதாபிமானப் பண்பும், தேசப்பற்றும் எந்நாட்டவரையும் ஆச்சரியப்படுத்துகின்றன. எனவே அப்துல் கலாமினுடைய போதனைகளும், வாழ்வியல் முறைகளும் ஒவ்வொரு மனிதனும் கற்றுப் பயன்பெற வேண்டிய விடயங்களாகும். ‘‘மக்களுக்குச் சேவை செய்வோம்’’ என்றும், ‘‘பொது வாழ்வுக்கு எம்மை அர்ப்பணித்து விட்டோம்’’ என்றும் மேடைகளில் முழங்கி காலம் காலமாக பாராளுமன்ற கதிரைகளை அலங்கரிக்கும் கௌரவ அரசியல்வாதிகள் அப்துல் கலாமினது சிந்தனைகளில் இருந்தும், அவரது வரலாற்றிலிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டியவை மிகஅதிகம். இவ்வாறான ஆய்வுகள் காலத்தின் தேவையே.

### உசாத்துணைகள்


Bhushan, K; Katyal, G. (2002). **A.P.J. Abdul Kalam: The Visionary of India,** New Delhi: A.P.H. Publishing Corporation.

Burgerm Jerry (2004) **Personality,** Thomso Learning Belmmt, USA.

Clay Lindgren Hedry (1933) **An Introduction to Social Psychology,** Wiley Eastern Limited, India

Sharma, Mahesh; Das, P.K; Bhalla, P (2004) **Pride of the Nation : Dr. A.P.J Abdul Kalam,** Diamond Pocket Books (P) Ltd. p.

Torn Quist Olle (1995) **The Cultural Context of Leadership and Power,** Sase Publications (pvt) Ltd, New Delhi.